திரு. கே. விநாயகம் : பழைய மாம்பலத்திலிருந்து ஜார்ஜ் டவுனுக்கு அல்லது மற்ற பகுதிகளுக்கு நேரடியாக போக பஸ் வசதி இல்லை. அதற்குக் காரணம் அங்கு லெவல் கிராஸிங் கேட் இருப்பதனால் தான் என்று கருதுகிறேன். இப்பொழுது கோடம்பாக்கத்தில் ஓவர் பிரிட்ஜ் கட்டப் பட்டிருக்கிறதே ? ஆகவே, பஸ்களை பழைய மாம்பலத்திலிருந்து ஆரம் பித்து, வட பழனி வந்து, அங்கிருந்து மற்ற பகுதிகளுக்கு ஓவர் பிரிட்ஜ் மூலம் போவதற்கு வசதி இருக்கிறதே ? இதைப் பற்றி அரசு யோசிக்குமா? அப்படி அது நியாயமான கோரிக்கை என்றால், அதை செயல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தற்பொழுது பழைய மாம்பலத் திலிருந்து தியாகராய நகருக்கு 49 என்ற எண்ணுள்ள வண்டி போய்க் கொண்டிருப்பதால், தியாகராயநகர் வந்து, பிறகு அங்கிருந்து ஜார்ஜ் டவுன் போன்ற, செல்ல வேண்டிய இடங்களுக்கு, செல்வதற்கு வசதி இருக் கிறது. உறுப்பினர் அவர்கள் கூறுகின்றது போல பஸ்கள் விடுவதற்கு, பழைய மாம்பலத்தில் துரைசாமி சாலையில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்ட பிறகு, அது ஏதுவாக இருக்க முடியும்.

விரைவுப் பேருந்து

*** 114 வினா.—திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவைக்கும், தேவகோட்டைக்குமிடையே பழனி, திண்டுக்கல் வழியாக தமிழக அரசு விரைவு வண்டி விடும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

பிற்பகல் 9-30. **திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இனிமேலாவது பேருந்து விட அரசு முயலுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கோவைக்கும், தேவகோட்டைக் கும் இடையே பேருந்து விடுவதற்கான செயற்குறிப்பு இல்லை என்று மூலக் கேள்விக்கு பதில் சொன்னேன். கோவையிலிருந்து, இராமநாதபுரம் வரைக்கும் பேருந்து விட செயற்குறிப்பு இப்பொழுது அரசாங்கத்தினுடைய ஆலோசனையில் இருக்கிறது. பரிசீலனை முடிவுற்ற பிறகு, அதைப்பற்றி யோசிக்கப்படும்.

Bulls for Cattle Farms

***115 *Q.*—Thiru A. M. RAJA :** Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government entered into an agreement with Palayacottah Cattle Farm and Kangeyam Cattle Farm in Coimbatore district during the year 1966–67 for the purchase of bulls :

(*b*) if so, the cost of each bull ;

(*c*) when the bulls were taken delivery of ;

(*d*) the total cost paid ; and

(*e*) when payment was made.